MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

Reg. No. M.

தனிப்பிரிதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE DIRECTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOl, I. { புதுவை, ஸ்ரீமுகஹூ கார்த்திகைமீ கருஉ (30—11—33) } No. I.

திருவாசகம்.

உற்ற ஆக்கையி னுறுபொருள் நறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர் சொற்றெளியாமே
அத்த னுண்டேன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்கன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் கால மினியில்லை
உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டேன்போ வதற்கே யொருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்க னுள்வான் புகழ்களையே,

உ

திருவருள் துணை.

ம
நந்திபதி
கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருநரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

வித்தகம்.

புதுவை.
ஸ்ரீமுக கார்த்திகை மீ 15உ

எமது கொள்கை.

திருத்தொண்டை நன்னாட்டிலே திருவோக்குவளப் புதுவை என்னும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் ஞானசாரியனும், கயிலை முதற்குரவனும் யாவற்றுக்கும் வித்துமாய் அல்லவுமாய் விளங்கும் வித்தகனும் மீண்டுவாரா உண்மை நெறியை அருளும்ஞானசத்திவடிவினனுமாகிய நந்தி யெம்பெருமான் திருவடிக்கமலங்களையும், அன்னவன் திருவருளைப் பூரணமாகப்பெற்றுத் தமது திருவாக்காலும் அரும் பெரும் செயலாலும் சத்திய நெறியாகிய சைவ நன்னெறியை நிலைநாட்டிய எம்பெருமக்களாகிய மணிவாசகர், ஞானசம்பந்தர், அப்பர் தம்பிரான்றோழர், திருமூலர் முதலிய வித்தகர் திருவடிகளையும், ஏனைய விஞ்ஞானகலர் பிரளயாகலர்களாகி விளங்கும் வித்தகச்சித்தர் திருவடிகளையும், நாயினும் கடையேமாகிய தமியேம் மன மொழி மெய்களால் ஒருவாறு வணங்கி, "வித்தகம்" என்னும் திருநாமம் பூண்ட எமது பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும் பழைய உண்மைச் சைவக்கொள்கையாகிய எமது கொள்கையைக் குறித்து ஒரு சிறிது கூறுதும்.

வித்தகம் என்பது யாது? அண்ட பிண்டங்கள் அண்டரண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னகத்து அடக்கி அவைகட்கு வித்தாயும் அவையாவும் ஆக்கமுறுதற்கு இடமாயும் இருப்பது எதுவோ, எல்லா உடலுயிருக்கும் வித்தாயும் அவ் உடலுயிரில் வித்தாயும் இருப்பது எதுவோ, வியாபகத்துக்கு வித்தாகிய வியாப்பியமாயும் வியாபகத்துக்கு ஆதியாயும் வியாபகமாயும் ஆழ்ந்து அறிவார்க்கு அல்லவாயும் இருப்பது எதுவோ, ஆதி அந்தமாய் ஆதி நடு அந்தமாய் விளங்கியும் அவ் ஆதி நடு அந்தத்துக்கு வித்தாயும் அவ் ஆதி நடு அந்தத்துள் மறைந்தும் விரிந்தும் (விசிரும்பித்தும்) தோற்ற ஒடுக்கங்களைத் தன்னகத்து அடக்கி அவைகட்கு வித்தாயும் விளங்குவது எதுவோ அதுவே வித்தகம் என்று அறிதல் வேண்டும்.

அளக்கலாகாப் பெருமாண்பு வாய்ந்த வித்தக வடிவினனும் சற்குருநாதனுமாகிய நந்தி யெம்பெருமான் கோகழியில், கோகழியின் மத்தியில் கனிறு விளங்கா நின்ற பெருந்துறையில் பெருந்துறையாகிய புதுவையில் (புது + வை = புதுமையான வைப்பு—பொக்கிஷம்—கருவூலம் —மூலபண்டாரம்.) உலகுய்யுமாறு அருண்மாரியாய்ப் பொழிந்த வேந்த உண்மைகளையும், மணிவாசகர் முதலிய வித்தகச் சித்தர் பெருமக்கள் அருளிய ஒப்புயர் வில்லாத் திவ்விய பிரபல சுருதியாகிய திருவாசகம் முதலிய திருமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு, உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி "மணங்கமழ் தெய்வத்திள நலம்" என்னும் சிவமணம் நிகழ அள்ளூருக்கையாய்ச் சுக்குமமாய் ஞான சத்தி வடிவாய் அடையப்படும் உண்மை முத்தியை—உலகு கண்டு போற்றத் தலத்தோடு மறைந்து சிறாங்கமாதலாகிய உண்மைச்சைவமுத்தியை உணர்த்துகின்ற பழைய உண்மைச் சைவக்கொள்கையாகிய இயற்கைநெறியை, வெள்ளிடைமலைபோல யாவரும் தெள்ளிதின் உணர்ந்து உய்யுமாறு நன்கு நிலைநாட்டுதற்கு இன்றியமையா அரும்பெரும் கருவியாகி விளங்குவது இப்பத்திரிகையாதலால், இஃதும் "வித்தகம்" என்னும் திவ்விய திருநாமம் பூண்டு இயலுவதாயிற்று என்க. வித்தகனாகிய புதுவை நந்தி திருவருளாணையால் இயலுவதாலும் "வித்தகம்" எனப்படும் என்க. வித்தகனாகிய ஆசான், ஆசானாகிய பதி பதியாகிய மதி, மதிப்பொலிவாகிய சதுரப்பாடு, சதுரப்பாடாகிய வித்தகம் திகழ்ந்து, தன்னைப் பொன்னே போற் போற்றிக் கற்றுணர்ந்து உணர்ந்தவாறே ஒழுகும் பெற்றி(பக்குவம்) உடையராயினாரைக் குருவருளால் வித்தகராக்கு முகத்தானும் "வித்தகம்" எனப்படும் என்க. "வித்தக"ப்பெயர்க்காரணம் இன்னும் பல்லாற்றானும் நன்கு வலியுறுத்தப் படுமாயினும் விரிவஞ்சிவிடப்பட்டது. கூறியன கொண்டு உண்மை கண்டு கொள்ளப்படுக.

விதிவினையை மதிவினையால் வெல்லும் சதுரப்பாடு திகழும் மெய்யடியாரே, அஃதாவது இருவினை சொரூபமாகிய உடலுயிர் மாசு தீர்த்து மாசு என்னும் பாசம் நீங்கி—பாசு பதமாகி ஒழிவற ஒன்றிச்சமரசம் பெற்று நித்தியத்துவம் அடைதற் கேற்ற வித்தகம் திகழும் மெய்த்தொண்டரே வித்தகர் என்பதும், அமல நிறை ஆக்கம் (நத்தம்) அடைதலும் அசத்து நிறை கேடடைதலும் (வேடு) சிவத்துவம் சாதலடைத்து. அஃதாவது (உறுதாலும் சாக்காடு என்பதும்)

சாதலுருச் சாதலடைந்து சிவத்துவம் திகழப்பெறுதலாகிய சாவா உடம்பு பெற்று நித்தியத்துவம் அடைதலும் அம் மெய்யடியாராகிய வித்தகர்க்கேயன்றி ஏனையோர் கல்வியில் எத்துணை வல்லபம் படைத்தவரேயாயினும் அவர்க்கு முற்றுக முடியாத காரியமே என்பதும்.

"சத்தம் போற்கேடு ... தாலும் சாக்காடும்
வித்தகர்க்கல்லா லரிது."

என்னும் தேவர் திருவாக்காலும் நன்கு வலியுறுத்தப் பட்டன.

உலகில் வழங்கும் சமயங்கள் எல்லாம் கடவுள் திருவடியை அடைவதென்பது—வீடடைவதென்பது சிற்சில உபாயங்களால், சடை கோடி பாவனைகளால், இறந்தபின், எளிதின் முடிந்து விடும் என்றே முழங்குகின்றன. சமயகோடிகளை எல்லாம் தனக்கு அங்கமாகக் கொண்டு அவற்றிற்குத் தலையாய் அரசு வீற்றிருக்கும் சைவசமயம் ஒன்றே, உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியம் பெறுதலே முத்தி நிலை என வற்புறுத்துகின்றது. வேதங்கள் எனவும் உபநிடதங்கள் எனவும் ஆகம புராண இதிகாசங்கள் எனவு[illegible] உலகில் வழங்கும் நூல்கள் எல்ல[illegible], இவ் உண்மையையே, சிவர்கள் பக்குவத்துக்கு ஏற்பப் படித்துப் படித்து உணருமாறு பல வகையான கற்பனைகளால் கூறுகின்றன; விளக்குகின்றன; குரு நெறி கண்டு அடையும்படி வற்புறுத்துகின்றன. "சைவசமயமே சமயம்" என ஆன்றோரும் கூறினர். யாவற்றுக்கும் தலையாய் அரசு வீற்றிருப்பதும், எத்தனையோ இருடிகளும் முனிவர்களும் மணிவாசகப்பெருமான் முதலிய சமயாசாரியரும் பிறர் பலரும் கைக்கொண்டு முதிக்காலனை வென்று நித்தியத்துவம் அடைதற் குரியதுமான பெரு மாண்புடைய சைவ சமயமும், ஏனைய சமயங்கள் போலவே, உடலை விட்டு உயிர் பிரிதலாகிய மரணமும் முத்திநிலை எனக் கூறுகின்றது என நினைக்கவும் சொல்லவும் படுமோ? அங்ஙனம் கூறுவதாயின் அதன் மாண்பு தான் என்னை? அதுதான் தலையாயது எனக்கூறுவதால் பயன் என்னை? மற்றைய சமயங்களும் தாம் தாம் தலையான சமயம் என்றால் குற்றம் என்னை? காய்தல் உவத்தல் அகற்றி இவற்றை ஆராயுங்கால் சைவம் தலையாயது என்பதன் உண்மை எளிதிற் புலப்படாததாகுமா? ஆகாது!

சிவரூபமாதற்குரிய — சிவாங்கமாதற்குரிய அரும்பெறல் ஆக்கையானது "மெய்" என்னும் திருநாமம் பூண்டு சத்தியம்சமாகித் திகழும் கூடாகிய வீடானது இருவினை சொரூபமாகிய முன்னிலைக் கோரணிகளால் அவச்சலனமடைந்து நரை திரை மூப்புப் பிணிகட்கு இடமாகிக் கட்டைமேல் வைத்துச் சுட்டுவிடும்படியும் குழியில் புதைத்துவிடும்படியும் பிணமாகி வீழ்ந்து பொய்யாகாது, உண்மைச் சாதக யோகங்களால்—முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்து உறவுபடுத்துதலால் காலனை வென்று — விதியை வென்று பிணி மூப்புச்சாக்காடும் பிறவியும் ஒழித்து அம் "மெய்" என்னும் பெயர்க்காரணம் வாய்மையில் புலப்படுமாறு நித்தியத்துவம் என்னும் அமிர்தத்துவம் அடைதற்குரிய மெய்ந்நெறியே—சத்திய நெறியே சகல சீவராசிகட்கும் உரியதும் இயற்கை மதமும் அநாதியானதுமாகிய சைவசமயமாண்பாகும் என அறிதல் வேண்டும். இவ்வுண்மை, கடவுள் அருளைப் பூரணமாகப் பெற்ற இருடிகள் முனிவர்களாலும், மணிவாசகர், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர் முதலிய மெய்யடியாராலும், ஆழ்வார் என்னும் திருநாமத்துக்கு வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மகான்களாலும் தம் தம் அருள்வாக்காலும் அரும் பெருஞ் செயலாலும் நன்கு நிலை நாட்டப்பட்டதாகும். சீவர்கள் கர்மம் *காரணமாக, உண்மை காலத்தோறும் மறைந்து விடுவதும் பின் வெளிப்படுவதும் இயல்பேயாதலால், பிற்காலத்தில் இவ்வுண்மை பளிக்கும் மங்கியொருனாகி, உடல் பிணமாகி விழச் செத்துப் போவதே முத்தி என்னும் அசத்திய நெறியே சத்திய நெறியாகிய சைவ நெறி எனத்திரிதலடைந்து தற்காலத்தில் தாண்டவம் புரிகின்றது. இதனால் உலகோர் மறம் பொருள் துன்பம் மரணம் என்பனவற்றையே அறம் பொருள் இன்பம் வீடு எனக்கண்டு அமைந்து தென்புலக் கோமகனுக்கு நல் விருந்தாகிப் பிறவி நெறி கண்டு உழல வேண்டியவராயினர். இவ்வாறு உலகம் அஞ்ஞான இருளில் அகப்பட்டுத் தட்டுளுப்புற்று நிற்றலால், அருளொளி திகழும் சத்திய நெறியாகிய பண்டைச் சைவ நன்னெறியைச் சிறிது சிறிதாக விளக்கிக்காட்டி யாவரையும் உய்தியடைவித்தற் பொருட்டே கலியோயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டாகிய இக்காலத்தில், கயிலை முதற்குரவனும் சைவபரிபாலகனுமாகிய நந்தியெம் பெருமான் திருவருளாணையால், இவ் "வித்தக" ஞானச்சுடர் புதுவையம் பதியாம் திருப்பெருந்துறையில் உதயமாகின்றது என அறிதல் வேண்டும்.

திருவருட் சகாயத்தாலன்றி நமது முனைப்பால் ஒன்றைக் கண்டு பிடித்து அடைவதென்பது முயற்கொம்பேயாகும். சீவர்களால் கண்டுபிடித்து வரையறுக்கப்பட்ட எவ்வகையான தந்திர மந்திர யோக சமாதிகளாலும், குட்டிக்கரணங்களாலும் ஒன்றும் முடிவதில்லை. திருவருட்சகாயம் கிடைக்கப்பெறுவது என்றால் — மெய்யுணர்ச்சி கைவரப்பெறுவது என்றால் எளிதின் முடியுமா? அப்பெற்றிதான் எங்ஙனமோ? எனின், அதன் அருமை பெருமையையும் இலக்கணத்தையும் உணர்த்துதற்கன்றே பின்வரும் பிரபல தெய்வச் சுருதி எழுந்ததென்பது

"வளைபயில் கீழ்கடனின்றிட
மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத்தொல்லோன் கயிலைக்
கிளைவயின் நீக்கியிக் கெண்டை
யங் கண்ணியைக் கொண்டு தந்த
விளைவையல்லால் வியவே
னயவேன்றெய்வ மிக்கனவே".
(திருக்கோவை செ. 6)

இம்மணிவாக்கு, மணிவாசகனுகிய பெருமறை கண்ட பெம்மான்—சத்தியாகிய பெண்ணுகிய காயப்பெண்ணுகிய தன் உடலை—“உருவளர் காமன் வென்றிக் கொடி போன்று ஒளிர்கின்ற” விமலவல்லியைத் “தான்” என்னும் உயிரோடு ஒன்றச்செய்த வித்தகச் சித்தர் பெருமான் அருளியது. உடலுக்கு உயிர் உயிராகவும், உயிருக்கு உடல் உயிராகவும் அமைந்து அவ் இரண்டும் பதிவிரதா தர்மத்தை இல்லறத்தை மேற்கொண்டு ஒழுகி ஒன்றுபட்டு நின்று சத்தும் சித்துமாய்—நாயகனும் நாயகியுமாய்க் கூடிக்குழைதலால் காமக்கனல் கதித்து அதனுள் மூழ்கி மூழ்கி எழுந்து எழுந்து நிறைகண்டு அமலம் பெற்று நின்ற அப்பன் மாணிக்கம் மணிவாய் மலர்ந்த கோவை என்னும் மாணிக்கத்தை, ஊனக்கண்களாகிய குருட்டுக் கண்களுக்கு ஒரு சிறிதும் புலப்பட முடியாத அருட்கடலாகிய கோவையை திருவருட் சகாயத்தால் ஆராய்ந்துழி உண்மை புலனுகும்—புலப்படும்—தென்படும் என்க. அஞ்ஞான்று உண்மை இன்னது எனக் கோவைக் கிளி தன் வாயால் கூறும்—பாடும் என்க. சைவம் இன்னது என—சிவம் இன்னது என மணிவாசகன் அருளிய கோவை —மணிவாசகக்கோவை பாடும். அப்பாட்டைக் கேட்டுணரும் ஆற்றல் உடையவனை அம்மாணிக்கக் கோவைக் கிளி கொஞ்சி விளையாடி அணைந்து சிவம் என்னும் அமல அக்கினியால் அவனைச் சுத்தம் செய்யும்—துப்புரவு செய்யும்— செம்மை செய்யும்—சிவமாக்கும் என்க. பின்வரும் அப்பர் அருள்வாக்கும் கண்டு நோக்கற்பாலது.

“சிவனெனு நாமந் தனக்கே
யுரிய செம்மேனியெம்மான்
அவனெனையாட் கொண்டளித்
திடுமாகிலவன் றனையான்
டவனெனு நாமம் பிடித்துத்
திரிந்து பன்னாளழைத்தால்
இவனெனைப் பன்னாளழைப்
பொழியானென் றெதிர்ப்படுமே.”

(தனித்திருவிருத்தம். செ. 9)

உண்மையை அறியும் ஆற்றலும் காதலும் இல்லார் பலர் மணிவாசகன் பாடிய பேரின்ப வாசகக் கிளியை—அருளமுத வாசகத்தைச் சிற்றின்ப நூல் என்ப. ஆ! ஆ! என்ன அருமை! என்ன பெருமை!

“சொற்பால முதிவள்யான்
சுவையென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத் தெய்வந்தந்
தின்று நண்ணிவளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில் வெற்பிற்
கற்பாவிய வரைவாய்க்கடி
தோட்டகளவகத்தே”

(கோவை—செ. 8)

என்று பாடுகின்றது மணிவாசகக் கிளி. மணிவாசக சிவம் இவ்வாறு அருளியது எற்றிற்கு? தீவினை சொரூபங்களாகி விதியும் ஒன்றும் போதா அறிவிலிகளாகிய எம் போலியர் உண்மையை அறிந்து உய்தியடைதற் பொருட்டேயன்றி வேறு எதன் பொருட்டு? சிவத்தைக் கண்ட சிவம்—சிவம் என்னும் அமல அக்கினியைக் கண்ட சிவம் மணிவாசக சிவம் அல்லவா? தீக்கையைப் பெற்றவர் இவரே. கரநியாச அங்கநியாசம் செய்தவர் இவரே. இவரைப்போல் அருளமுதம் திகழும் பேரின்பக் கோவை பாடினவர் வேறொருவர் உளரோ? இல்லை. இல்லை. இல்லை. சிவசமயத்தைக்கண்டவர்—சிவம் என்னும் அமல அக்கினி சமயத்தைக்கண்டவர்—இந்து மதத்தைக் கண்டவர் இவரே என்க. இவரே சைவர்—சிவசம்பந்தம் பெற்றவர்—சிவமானவர்—சிவாங்கமானவர்—உலகு கண்டு போற்றத் தூலத்தோடு மறைந்து உண்மைச் சைவ முத்தி அடைந்த

நமது குருமூர்த்தி என அறிக. நமப் பார்வதி பதயே! ஹர ஹர மஹாதேவ!

“சிவம்” எனும் சொல் “சைவம்” என்று ஆயது எங்ஙனம்? சிகரம் ஐகாரத்தைத் தழுவிச் சைவம் என்று ஆயிற்று? பிறவாறு? எனின், சிறிது கூறுதும். சகரமெய் (ச்) இகரத்தைத் தழுவிச் “சி” ஆனது; அகரத்தைத் தழுவிச் “ச” ஆனது. அகரமும் இகரமும் சேர்ந்து “ஐ” ஆனது. “அகர இகரம் ஐகாரமாகும்” என்பது இலக்கண நூல். “ச்” என்னும் மெய் “அ” “இ” என்பது சேர்ந்து “சை” ஆனது என்க. “சி” என்பது பெண்ணையும் அஃதாவது பெண் என்னும் சத்தியையும் காட்டிச் சிவம் என்னும் பெயர் பெறுகின்றது. இதனுல் சத்தியே ஆதி என்பது பெறப்படுகின்றது. எதற்கு ஆதி? எனின், சீவர்களுக்கு (நமக்கு) ஆதி என்க. சத்தியாகிய தூலமே ஆதி என்பது. ஆன்மாக்கள் தூலமாகிய சத்தியை ஆதி (இ) யை விட்டு வியாபகம் என்னும் தோற்றத்துக்கு ஆதி (அ) யைப் பற்றுவதுதான் சாதல்—இறப்பு என்பது. இறப்புஎன்பது நிறைபிரிந்து கடத்தல் எனப்பொருள்படும். வியாபகத்துக்கு ஆதி என்பது அகரம். அகரமே பேழைவாய்திறப்பது. இ என்னும் அசைவை—வியாபகம் என்னும் அசைவை—அசைவு என்னும் இயக்கத்தை (மெய்யின் இயக்கம்) விடாமல், அ என்னும் ஆதியைப் பற்றினுல் அகரமும் இகரமும் சேர்ந்து “ஐ” என மலரும் என்பது. அன்றி, “சி” நிறைபிரிந்து (இகரத்தோடு கூடிய “ச்” அவ் இகரத்தைவிட்டு) அகரத்தோடு கூடினுல் சிவமாகாது சவமாகும்—சிவம் சவம் எனத் திரியும் என்க; சைவம் எனத்திரிந்து மணக்காது—சிவ மணம் கமழாது என்பது. இதனுல் பெறப்படுவது யாது? வியாபகத்தினின்று வியாபகமெனும் பங்கத்தினின்று கரையேற வேண்டுமாயின், இகரமெனும் சத்தியை சத்தி என்னும் பெண்ணை பெண் என்னும் சிவையை சிவை என்னும் தூல உடம்பைத் தழுவிக் கதியடைய வேண்டியதே—முத்தியடைய வேண்டியதே முறை என்பதாம்—வைதிக சைவ நெறி என்பதாம். “பெண்ணைப் பார்த்தலையாதே பெண்தான் தேகம்” என்றுர் சித்தமூர்த்தி ஒருவர். தூலத்தைத் தழுவுதல் என்றுல் என்னை? எனின், சற்குருநாதன் அருளால் இனமான முன்னிலைப்பொருள்களை நிறைகண்டு பஞ்சீகரணித்தலால், அத்தூலமாகிய உடலும் உயிரும்

ஒழிவற ஒன்றி அள்ளூறாக்கையாய்ச் சூக்குமமாய் ஞானசத்தி வடிவமாகிய பிரணவ வடிவ (ஓ வடிவம்) மாகுமாறு அதனை அமலமாக்குதலை என்று கூறப்படும். இங்ஙனம் இகரமாகிய சத்தியை சத்தியாகிய தூலத்தைப்போற்றாது அலட்சியம் செய்து அதனைப் பிரிந்து அகரத்தைத் தழுவினால் அவகதியே அவகதியாகிய சவகதியே அமையும்; தூலம் பிணமாகி விழ இறத்தலாகிய பிறவி நெறியே உளதாகும் என்க. இங்ஙனம் அவகதியடையாது, அகரமும் இகரமும் சேர்ந்து "ஐ" என மலர்ந்து சைவ மணம் கமழ்ந்தமையால் தாம் சிவகதி பெற்ற – சிவமான உண்மையையே பின்வரும் சுருதிகளால் நன்கு புலப்படுத்தியருளினார் நமது மணிவாசகப் பிரபு என அறிதற்பாற்று.

" அவமாய தேவர் அவகதி யிலழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டு கொண்ட
[பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்நல்குதலூா மோழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்
[டாமோ. "

(திருவாசகம் திருத்தெள்ளேணம், செ. 4.)

" .... சித்தஞ் சிவமாக்கி .... "
(ஷை. திருத்தோணோக்கம் செ 6.)

" ... சித்தமல மறுவித்துச் சிவமாக்கி..."

(ஷை. அச்சோப் பதிகம் செ. 1.)

" ....
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்,
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை, இன்
றெனக் கெளிவந் தருளி, அழிதரும் ஆக்
கை யொழியச் செய்த வொண்பொருள்,
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
....
அள்ளூ றாக்கை அமைத்தனன்............
....
அருளொடு பராவமு தாக்கினன்.
.... "

(ஷை. திருவண்டப்பகுதி)

இவற்றால், சிவசமயம் என்னும் தேயுசமயம் பெறாதார்-அமல அக்கினியாகிய சிவம் அணு அணுவாகக் கதி பெற்று அதிகரித்து அச்சிவம் தலைமை பெறும் காலம் - சமயம் பெறாதார்- அளவு பெறாதார்-அமலநிறை பெறாதார் சிவ சம்பந்தமுடையவர் எனப்படுதற்கு — வாய்மையான சைவர் எனப்படுதற்கு உரியராகார் என்பது வெள்ளிடைமலையாம்.

அகரம் என்னும் உப்பு (சிவம்) இகரம் என்னும் புளியை (அப்பு-சத்தி) நிறையோடு பஞ்சீகரணித்துத் தழுவாவிடின் உருவில்லை; உணர்வில்லை; மூச்சில்லை; பேச்சில்லை; முத்தியில்லை. இவை ஒன்றனை விட்டு மற்றொன்று தனித்திருக்க மாட்டா. உகரம் சத்தியன்றோ எனின், அதுவும் சத்திதான் இகரமே உகரமாயிற்று என்க. இகர ஒலியீற்றில் உகரம் மெத்தெனத் தொக்கு விளங்குவது நுண்ணிதின் உணரப்படும். இவ் உகரமே அசுத்த மாயை; காரியத்தில் காரியமான-காரியத்தினின்றுகாரியப்பட்ட தூலச்சிவை. இவ்உகரமேஉகரமாகிய மூன்னிலையே முன்னிலையாகிய தூலமே துப்பு நீங்கினால்-களிம்பு-பாசம் நீங்கினால் இகரமாகித் திகழும்-திரியும் என்க. ஆதலால் அ, இ, உ மூன்றும் சேர்ந்து "ஓ" என ஒலித்து "ம்" என ஊன்றும். ஊன்றும் இடமே பதி. பதி என்பது இடம், ஊர், தேசம் எனப்பொருள் படும். இதனால் பெறப்படுவது யாது? ஆதி அந்தம் ஒன்று பட்டபோது நடுவனை தோன்றும் என்பது. ஆதிநடு அந்தம் இம்மூன்றும் அநாதி. ஒன்றேயெனின் ஒன்றல்ல; இரண்டேயெனின் இரண்டுமல்ல; ஒன்றும் தான் இரண்டும் தான் இதனைத்தான் அவாச்சியம், அவாங்மன கோசரம் என்பது.

உலகம் உப்புமயம் அப்புமயம் இதனை யாவரும் கண்டுங் காணாதவரே இதனாற்றான் முத்திநிலையும் மறை பொருளாயிற்று. என்னை? உண்மை என்றும் மறைபொருளே யாதலின் என்க. உப்பு மயமாகிய உலகில்-முன்னிலையில்-சரீரத்தில் உள்ள துப்பு எனப்படும் அழுக்கை-பாசத்தைத் தூய்மை செய்ய அறியாது, உலகோர் முத்தி என்பதனை நேர்ந்த நேர்ந்தவாறு பொருள் செய்து, சில நடை நொடி பாவனைகளால், இறந்தபின் அதனை எளிதில் அடைந்து விடலாம் என உறுதிகொண்டு சோம்பேறிகளாய் வீற்றிருந்து தென்புலக் கோமகனுக்கு நல்விருந்தாகின்றனர். உப்பில் இருக்கும் துப்பை நீக்கி அதனை உறவு செய்ய அறியாதார்-துப்புரவு இல்லாதார்- முன்னிலையை உறவு செய்ய அறியாதார் அன்பர் எனப்படுவது எப்படி? அடியார் எனப்படுவது எப்படி? அறம் பொருள் இன்பங்களை அடைவது எப்படி? வீடு பேறடைவது எப்படி? இவ்வுண்மைகள் எல்லாம் அமையம் நேர்ந்துழி நேர்ந்துழி ஒவ்வோர் அம்சமாக விரித்து விளக்கப்படும். இது காறும் கூறியவைகளால் "வித்தக" வாயிலாக வெளியிடப்படும் எமது கொள்கை ஒருவாறு உணரத்தகும்.

சத்திய நெறியாகிய இவ் அரிய பெரிய கொள்கைக்கு அநுகூலமாக, இருக்கு முதலிய வேதங்களிலும், உபநிடதங்களிலும், ஆகமபுராண இதிகாசங்களிலும்,சித்தர் நூல்களிலும், செந்தமிழ் நறுமணம் கமழும் சங்கச் சான்றோர் நூல்களிலும் புதைந்து மறைந்து கிடக்கும் அளக்கலாகாப் பெரும் வெட்டுடைய-பெருநிறையுடைய அழிவிலா உண்மைகளும், தமிழ் இலக்கணமாண்பும், அகம்புறம் என்னும் ஒழுக்கங்களின் உண்மையும், சமயக்கிரியை முதலிய கற்பனைகளின் உண்மையும், ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர என்னும் பதங்களால் வழங்கப்படும் அந்தணம் அரசு வேளாண்மை குடிமை என்பனவற்றின் உண்மையும், பிரமசரிய முதலிய நிலைகளின் இயல்புகளும், அறமுதல் நாற்பொருட்பெற்றியும், லௌகிகமே பாரமார்த்திகம் அஃதாவது லௌகிகமே பாரமார்த்திகமாகத் திரியவேண்டும் என்பதன் உண்மையும், இன்னோரன்ன பிறவும் அனைவரும் உவகையோடு ஒப்புக்கொள்ளும்படி

தடை விடைகளான் இனிது விளக்கிக் காட்டுவதும் எமது "வித்தக" த்தின் கடனாகும். இவ்வாற்றால், தமிழை வளர்ப்பதும் எமது கடனாகி அமைதலால் இவ் அரிய பெரிய சிவப்பணிக்கு வித்துவப்பெரியார் விழுத்துணையும் மிக்கபணிவுடன் வேண்டப்படுகின்றது; ஆவலோடு எதிர் பார்க்கப்படுகின்றது. இவ்வாறு, எல்லாச் சாதியாளர்க்கும் சமயத்தவர்க்கும் உரியதாய், சமய கோடிகளை யெல்லாம் தனக்கு அங்கமாகக் கொண்டு அரசு வீற்றிருக்கும் இயற்கை மதமாகிய இந்துமத உண்மைகள் என்னும் பண்டைய உண்மைச் சைவக் கொள்கையையே தொடர்புற விளக்கி இயலுவது எமது "வித்தக" நீர்மையாதலின், காய்தல் உவத்தல் அகற்றி அவற்றை ஆராய்ந்து உண்மைக்கு மாறுபடாத சில பலவற்றை வெளியிட விரும்புவோர் உளராயின், அவர் தமது கருத்துக்களை விளக்கமுற எழுதி எமக்கே அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றனர். அவ் ஆராய்ச்சியுரைகளை வெளியிடுவதோடு அவற்றில் காணப்படும் தடைகளுக்கு ஏற்றவிடைகளும் எவ்வகையான வெறுப்பும் இன்றி உவகையோடு தொடர்புறக் கூறி யாவரையும் தெருட்டுவதும் எமது "வித்தக" த்தின் கடனாகும் என அறிதல் வேண்டும்.

அறத்தாறு (தர்மம்) மறைந்து மறத்தாறு (அதர்மம்) சிறந்து உலகம் தலைகாலாய்க் கால் தலையாய் மாறி நிற்றலால், மிகச்சமீப காலத்தில் உண்மையாகிய சத்தியம் சத்தியமாகிய வேதம் வேதவடிவாகிய ஆசான் ஆசானாகிய ஆரியன் ஆரியனாகிய சிவம் சிவமாகிய நந்தியெம்பெருமான் நந்தியெம்பெருமானுவெளித்தகன் வித்தகனாகிய சைவசமய அரசன் — சைவபரிபாலகன், மூவுலகும் போற்ற, இத்தமிழ்நாடு பன்னெடுங்காலம் புரிந்த அளப்பரிய நற்றவப்பயனாய் வெளிப்பட்டுத் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலகனாய்ப் போலிக் கொள்கைகளை அறவே ஒழித்துச் சத்திய நெறியாகிய உண்மைச் சைவத்தை நிலை நாட்டியருளும் புதுமைக்கு—புதுமை காட்டிச்சிவம் காட்டும் தெய்விக வித்தக ஞானச்சமரமாகிய அறப்போருக்கு முதற்கண் அரிய பெரிய அறிகுறியாக "நாட்கோள்" விழவொடுபுறம் போந்துலவும் அன்னவன் வித்தகவென்றி ஞானவாட்படையாகிய வீரபத்திரப் படையுமாகின்றது எமது "வித்தக" வீரபத்திரம் எனவும் அறிதற்பாற்று.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த இவ் "வித்தகம்", அபிமானப் பேயால் ஆவேசிக்கப்படாது உண்மையை நாடும் ஆற்றலும் காதலும் வாய்ந்த தமிழ நன்மக்கள் அனைவராலும் தம் தம் அரும்பெறல் மகவு போலப் போற்றப் படுதல் யாவருக்கும் ஆக்கம் தரும் பெரும்பணியே — இறைபணியே—சிவத்தொண்டே என்பதனைத் தமியேம் விளக்கமுற விரித்துரைத்து எமக்குத் துணைவராகுமாறு அன்னாரை வேண்டிக் கோடல் மிகை என்றே கொள்ளுதும். என்னை? தற்காலச் சமய நிலைமையை யாவரும் நன்குணர்ந்தவரே யாதலினால் என்க. பிறிதோர் ஆற்றானும் அறிதற்கரிய அரிய பெரிய உண்மைகளையே உள்ளுறையாகக் கொண்டு வெளிவரும் வித்தக மாண்மையும், அதனாலாம் பேற்றின் அருமை பெருமையையும், சந்தாப் பணத்தின் சிறுமையையும் உற்றுநோக்கும் பெற்றி வாய்ந்தோர் இச்சிவப் பணிக்குத்தாமாகவே வலிந்து துணைபுரிய முன்வருதலோடு, பிறரையும் இவ் அரிய பெரிய பணியில் ஈடுபடுமாறு ஊக்கிவிடுவார் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை,

இவ் "வித்தக" ஞான பாஸ்கரன் தற்கால உலகிற் பரந்த அஞ்ஞான இருள் இரியுமாறு அருளொளி பரப்பிப் பல்லாண்டு வாழ்ந்து யாவரையும் இன்பவாழ்வடையச் செய்யுமாறும், இச்சிவப்பணியில் ஈடுபடுவோர் யாவரும் திருவருளுக்கு இலக்காகிச் சிறக்குமாறும் கருணை வழங்கு நம்பு எல்லாம் வல்ல சித்தனும் சற்குருநாதனுமாகிய குயின் மொழியம்மை (கோகிலாம்பிகை) சமேதகாமேசப் பெருமான் திருவடித் தாமரைகளை மனமொழி மெய்களால் சிந்தித்து வந்தித்து வணங்குகின்றோம். நமப் பார்வதிபதயே! ஹர ஹர மஹாதேவ!

ஞானசத்தியும் சற்குருநாதனுமாகிய
புதுவை நந்திபொன்னடி வாழ்க.
"வித்தகம்" பல்லாண்டு பல்லாண்டு வாழ்க
மணிவாசகன் திருவடிக்குப் பல்லாண்டு.
திருமூலவள்ளல் குரு மரபு வாழ்க
மெய்யடியார்கள் வாழ்க.
சைவம் தழைக.

நோபல் பரிசு.

1895௵ நவம்பர்௴ 27௳ இல், அல்பிரேத் நோபல் அவர்களின் மரணசாசனத்திலிடம் பெற்று அடுத்த வருடம் டிசம்பர் 30௳ இல் ஸ்தோகோல்ம் Stockholm) தலைநகரில் ஸ்தாபிக்க பெற்றது நோபல் பரிசு. ஜீவ கோடிகளின் முன்னேற்றங் கருதி உழைக்கும் புண்ணிய புருடர்களைச் சன்மானித்து ஊக்குவிப்பதே இந்நோபல் பரிசின் நோக்கம். இதற்கென்று ஒதுக்கியுள்ள முதற்தொகையின் வருவாயை ஐந்து சம பாகங்களாகப் பகுத்து பௌதிகத்துறையிலீடுபட்டு மிகப் பிரதானமான மறைந்து கிடந்த பொருளையோ அன்றிப் புதிதாக ஏற்பட்ட ஒரு ஆராய்ச்சிபலனையோ உலகத்தவர்க்கு அளித்த பௌதிக வல்லுநர்க்கு முதற்பகுதியும், இரசாயனத்துறையில் உழைத்து அதன் சம்பந்தமான விசேஷ ஆராய்ச்சிகளை உலகத்திற்குதவிய மேதாவிகளுக்கு இரண்டாம் பாகமும், மூன்றாவது தேகக் கூறு சாத்திரங்களிலேனும், மருத்துவத் துறையிலேனும் தலையாய ஆராய்ச்சிகளை வெளியிட்ட விற்பனர்களுக்கும், நான்காவது இலக்கிய இலக்கணத்துறையில் மேன்மை வாய்ந்து ஒப்புயர்வற்ற அறிவு நலங்கள் துளிர்க்கும் மனோரத நூல்களை வரைந்தோர்க்கும், ஐந்தாம் பாகம் ஜன சமுதா

(7-ம் பக்கம் பார்க்க.)

ரசாயன குழந்தை எதிர்பார்க்கப் படுகிறது.

ஓர் விதமான மரத்தின் சத்தும், இலையின் சத்தும் சேர்த்து ஓர் இரத்த நீர் பாகம் செய்து டாக்டர், எர்ல், டட்டிங் என்பவர், தம் பெண்சாதியாகிய மிஸஸ் டட்டிங்கினுடைய ரத்த குழாய்களில் உட்செலுத்தியிருக்கிறார். அவர் ஓர் ரசாயன குழந்தை நவம்பர் மாதத்தில் பிறக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறார். அப்படி பிறந்தால், சாஸ்திரிகளை கூப்பிட்டு உண்மையை காண்பித்து, அந்த சோதனையால் உலகத்திற்கு ஓர் புதிய வர்க்கம் உண்டாக்கக் கூடும் என்று நினைக்கிறார்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

யங்கள் தம்முன் உடன் பிறந்தார்களைப் போல் வாஞ்சை காட்டி வாழ்வதற்கும் மிருக பலத்தின் வெற்றியைக்குறிப்பதே போன்று விளங்கும் ஆயுத சக்தியை அழிப்பதற்கும் குறைப்பதற்கும் இதற்கான பல பொது இயக்கங்களை வகுத்து அதன் வழி உழைத்த, உழைக்கும் மகாத்மாக்களுக்கு மாக விநியோகிக்கப்படுகின்றன. இப்பரிசுக்கென வைத்த மூலத்தொகை 40 இலட்சத்திற் கதிகப்பட்டதாகும்.

நோபல் வைத்திய பரிசு.

இவ்வாண்டுக்கு நோபல் பரிசு வைத்திய பகுதியின் சார்பாக சந்ததி விருத்தியை பற்றி நூதனமாக ஆராய்ச்சி செய்து முக்கியமான விஷயங்களை கண்டு பிடித்தவரும், கலிபோர்னியா என்னும் ஊரில் பண்டிதருமான தோமாஸ் ஹன்ட் மார்கன் (Thomas Hunt Morgan) என்பவருக்கு வழங்கப்பெற்றது.

நோபல் சமாதானப் பரிசு.

இவ்வருஷம் யாருக்கும் இல்லை.

•சமாதனத்தைப் பாதுகாக்கவிசேஷமாக உழைப்பவர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த நோபல் பரிசு இவ்வருஷத்தில் யாருக்கும் அளிக்க வேண்டியதில்லையென்று தீர்மானமாயிருக்கிறது.

பிரஞ்சி இந்தியா சட்டசபை திறப்பு விழா.

பிரஞ்சிந்தியா சட்டசபை (Conseil General) கூட்டம் சனிக்கிழமை (25-11-33) நான்கு மணிக்கு மேன்மை தங்கிய பிரஞ்சிந்தியா கவர்னராகிய ஜார்ஜ் புரே (George Bourret) துரை அவர்களால் புதுவை நகரமாளிகை மண்டபத்தில் ஏரான ஜன கூட்டத்தின் மத்தியில் திறந்து வைக்கப்பட்டது. எவ்வித குழப்பமன்றி கூட்டம் நடந்தேறியது. கவர்னரின் பிரசங்கம் முடிந்த பிறகு புது வருஷத்திற்கு 22 சட்டசபை அங்கத்தினருள் தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீமான் R. செல்லான் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். காரைக்கால் ஸ்ரீமான் தியாகராச பிள்ளையும், சந்தர்நாகூர் சாதுசரன் முக்-ர்ஜீயும் உப தலைவர்களாக நியமிக்கப் பட்டனர். ஸ்ரீமான்கள் பாலசுப்ரமணிய பிள்ளை, பெருமான் நாயகர், செல்வராஜு செட்டியார் இவர்கள் காரியஸ்தர்களாக நியமிக்கப்பட்டனர். ஸ்ரீமான்கள், பாலசுப்ரமணியபிள்ளை, தனராஜா பிள்ளை, யூபேர் தெ ரொஜாரியோ, சாதுசரன் முக்கர்ஜீ, ஹான்றி கெப்னே, ஞானு தியாகு, ஜோசப் லப்போர்த், பெருமான் நாயகர், ராமச்சந்திர நாய்க்கர், சாம்பசிவம் செட்டியார். செல்வராஜு செட்டியார், வீரப்பிள்ளை இவர்கள் பொருளாதார கமிட்டி அங்கத்தினர்களாகவும், ஸ்ரீமான்கள், பாலசுப்ரமணிய பிள்ளை, தனராஜா பிள்ளை, யூபேர் தெ ரொஜாரியே, பெருமாள் நாயகர், ராமசந்திர நாயகர், சாம்பசிவம் செட்டியார், சாதுசரன் முக்கர்ஜீ, வீர பிள்ளை வேறு பல பொதுக் காரிய கமிட்டி அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

லப்போர்த் அவர்கள் 1933 வருஷத்திய கோலோனியல் கமிஷன் ரிப்போட்டை (Rapport de lacommision coloniale) வாசித்தார். பிரஞ்சி கொலோனி மந்திரிக்கும்; தெப்பித்தே, சேனத்தேர்° அவர்களுக்கும் நூர் வாழ்த்து தந்தி அனுப்புவதாக சபை முடிபு செய்து கலைந்தது. பிறகு புது அங்கத்தினர்கள் கவர்னர் மாளிகைக்கு சென்று கவர்னரின் வாழ்த்துரை பெற்றார்கள்.

பிரஞ்சிந்தியா வர்த்தமானம்

நீதி இலாக்கா மாற்றங்கள்.

ஒப்பியா துரையவர்களுக்கு பதிலாக மதகஸ்கார் அவோக்கா (அலெக்ஸாந்திர்—ஜோசப்—கஸ்தோன் தேசிரே) சிமா துரையவர்களை புதுவை முதல் நீதிஸ்தலத்தில் 2-வது வகுப்பு நீதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கிறது.

*
* *

கோலோனியல் கால்படை 2-வது பட்டாளத்தை சேர்ந்த கப்பித்தேன் டாக்டர் லேரூசி துரையவர்களை புதுவைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அவர் டிசம்பர் மீ 25-ந் உ பிரான்ஸில் கப்பல் ஏறுவார்.

*
* *

காரைக்கால் உதவி நீதிபதியான ரெழீஸ் அவர்களை ஸ்ரீமான் ஜீவரத்தினத்திற்கு பதிலாக ஏனம் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

*
* *

வியாபார சங்க (Chambre de Commerce) தேர்தல்.

புதுவை வியாபார சங்கத்தில் (Chambre de Commerce) முதலாவது லீஸ்த் மூன்று அங்கத்தினர்களாகிய, ஹான்றி கெப்னே துரை, அல்பேர் கெப்னே துரை, ஷார்ல் கொல்லேஸ் துரையவர்களுக்கும் இரண்டாவது லீஸ்த் ஸ்ரீமான்கள் ந. செல்வராஜு செட்டியார், ஸ்ரீமான் பொன்னூர் கிருஷ்ணசாமி செட்டியார் அவர்களுக்கும் கெடுவு முடிந்தபடியால் சங்கத்துக்கு புது தேர்தல் 1933-ம் ஞு டிசம்பர் மீ 17-ந் தேதியன்று புதுவை நகரமாளிகையில் நடைபெறும்.

*
* *

கிரிமினல் செஷன்

புதுவை நான்காவது கிரிமினல் செஷன் டிசம்பர் மீ 11 உ திங்கள்கிழமை காலை எட்டு மணிக்கு திறக்கப்படும். டெ செஷனுக்கு பிலிபோன் துரையவர்களும், பினேரி துரையவர்களும் நியாய சகாய நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

செய்தித் திரட்டு.

பிரஞ்சு மந்திரிசபை ராஜிஞமா.

மீண்டும் வாவு செலவுகளைச் சரிகட்டச் செய்வதற்கான ஏற்பாடுகளையொட்டி கவர்ன்மெண்டுக்கு ஜனப் பிரதிநிதி சபையில் தோல்வியேற்பட்டு, மந்திரிசபை ராஜிநாமாச் செய்துவிட்டது. சர்க்கார் உத்தியோகஸ்தர் சம்பளத்தைக் குறைக்க வரி மசோதாவில் வகை செய்யப்பட்டிருந்தது. இதை யெடுத்துவிட வேண்டுமென்று செய்யப்பட்ட பிரேரணையை கவர்ன்மெண்டார் தோற்கடித்தனராயினும், 12 ஆயிரம் பிராங்குக்குக் குறைந்த வரும்படி யுள்ளவர்களை சம்பளக் குறைவிலிருந்து விலக்கவேண்டுமென்ற அபேதவாதிகளின் பிரேரணை நிறைவேறிவிட்டது. ஒட்டுகள் 321-ம் 247-மாக இருந்தன.

*
* *

பிரான்ஸ் தேசிய அதிர்ஷ்ட சீட்டு

ஒரு நாவிதனின் அதிர்ஷ்டம்.

பிரான்ஸில் தாஸ்கோன் என்கிற ஊரிலுள்ள பேரல் போன்ஹவுஸ் என்கிற நாவிதனுக்கு 50லக்ஷம் பிரான் (62,000 பவுன்) பிரான்சு தேசிய அதிர்ஷ்ட சீட்டு அடித்தது.

ஷையூரில் மூான்தார்மெரி அதிபராகிய மற்றொருவருக்கு ஒரு லக்ஷம் பிரான் அடித்தது.

*
* *

புகையிலிருந்து கந்தகம்

கானடா பரீக்ஷையின் பலன்.

டாரண்டோ சர்வகலா சங்கத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்கள் சிறிது காலமாகச் செய்துவந்த பரீக்ஷைகளின் பலனாக காகித ஆலைகளிலிருந்தும் சாங்கங்களிலிருந்தும் வீண் போய்விடும் புகையைக் கொண்டு கந்தகத்தை தயார் செய்யலாமென்று கண்டறிந்திருக்கிறார்கள். கானடாவில் கந்தகம் உற்பத்திசெய்யப் படவில்லை. அதனால் 8 லக்ஷம் பவுன் பெறுமான கந்தகத்தை யுனைட்டெட் ஸ்டேட்ஸிலிருந்து தருவித்து வருகின்றனர். இந்த முறையைக் கையாளுவதால் கானடாவுக்கு வேண்டிய கந்தகத்தை உற்பத்தி செய்து கொண்டு விடலாமென்று அவர்கள் சொல்லுகின்றார்கள்.

சைகோனுக்கு வர அனுமதி

ஸ்ரீமான் சோக்கலிங்கம் செட்டியாருக்கும் அளிக்கப்பட்டது.

1932-ம் வருஷத்தில் ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியாரும் மற்றும் 4 செட்டியார்களும் சைகோனிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டதும் ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியார் நீங்கலாக ஏனைய 4 செட்டியார்கள் சைகோனுக்கு திரும்பிவர ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். தற்பொழுது அந்த நால் வருடன் ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியாரும் சைகோனுக்கு திரும்பிவருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

"வித்தகம்"

சந்தா விபரம்.

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ.3-0-0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ 4-0-0

வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India.)

"வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு
ரூ. 0—8—0
கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு
ரூ. 1—0—0
☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India)

ஏஜண்டுகள் தேவை

எமது "வித்தகம்" என்கிற வாரப் பத்திரிகையை விற்பனை செய்ய ஒவ்வொரு ஊரிலும் தக்க ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

"வித்தகம்"
வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India)

பிரசித்திபெற்ற பிரஞ்சு மருந்து.

மக்களை வளர்க்கும் மான்ஸோ ஷர்பத்து
இக்கலியுகத்திற்கேற்ற சம்பத்து.

சிசுக்களின் சுகாதாரத்திற்கு ஓர் அமிர்த சஞ்சீவிபோன்றது. இரஸாயனச் சரக்குகளின்சேர்க்கையில்லாதது, பழவர்க்க சத்துக்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. கெடுதலே நிறைந்த பேதி மாத்திரைகளை விலக்கி அதற்குப் பதிலாக இந்த ஷர்பத்தை யுபயோகித்து வந்தால் குழந்தைகட் கேற்படும் அஜீரணம், வாந்தி, வயிரோட்டம், இருமல்,கக்குவான், குலைக்கட்டி முதலியவைகளென்றும் வராமற் காப்பாற்றிக் கவசம்போற் சரீரத்தைக் காபந்துசெய்து மக்களது எதிர்கால வாழ்வினுக்குப் பெரிய அநுகூலத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இந்தியா ஏஜன்ட்ஸ்:—

M. அப்பாசாமிசெட்டி & சன்ஸ், புதுச்சேரி.